ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

**20.08.2026**

1. ஞானிகளை கலியினில் படைக்க
ஞானபண்டிதனார் பேரருள் புரிந்து
ஞானிகளை வணங்கும் பூசை முறை
நல்கி பிரணவக்குடில் வழிகாட்டி வர

2. வருகவே ஆறுமுகனார் வழிகாட்டிய
வல்லமை மிக்க ஞானியாக
ஆறுமுக அரங்கமகா தேசிகன் யானும்
அருளுவேன் பராபவ வேங்கை திங்கள்

3. திங்களில் முதல் குருவார ஆசியாக
தொண்டர்கட்கு வழிகாட்டி உரைப்பேன்
ஓங்காரக்குடில் ஞானிகள் அருளும்
உயர்வான ஞான சபையாகும்

4. ஆகவே அணுகி வந்து கலந்து
அருளமுது உண்டு உலகோர்
மிகைபட சரணாகதி கொண்டு
முழுமைபட சைவநெறி ஏற்று

5. ஏற்றுமே ஞானிகள் பூசையில்
இணைந்து கலந்து தொடர்ந்து
மாற்றம் வேண்டி வேண்டல் வைத்து
மகான்களை நித்தம் வணங்கி வர

6. வருகவே அவரவர்க்கு உள்ளும்
வந்தடையும் சடுதி மாற்றங்கள்
தரும சிந்தை தயவு ஒழுக்கமென
தனித்துவம் பெருகிட மாற்றங்கள்

7. மாற்றங்கள் தனை அரங்கன் யான்
மக்களுக்கு தந்தருள் புரிவேன்
ஆற்றல்மிக்க அரங்கன் என் வழி
அன்னதானத்தில் பொருளுதவி செய்து

8. செய்துமே வணங்கித் தொடர
சீடர்களாக ஏற்று அவரவர்க்கும்

மெய்ஞானம் தந்தருள் புரிவேன்
மேல்நிலை அருள் பொருள் வகை

9. வகைபட தேகமன பலமும்
வல்லமைபட ஞான பலமும்
பகைமை எதிர்ப்பு சோடையின்றி
பாதுகாப்புமிக்க ஞானவாழ்வு அடைவர்

10. அடையவே ஞானி என் வழியை
அடைந்துமே தொடரும் மக்கள்
தடையின்றி ஞானவாழ்வினை
தக்க வைப்பதுடன் தேறியே

11. தேறியே ஞானிகள் ஆவர்
தேசிகன் என் வழி கோடி மேல்
வருமுலகில் ஞானிகள் படை பெருகுவர்
வழங்கிய அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி